தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ரூ. 1,450 கோடி செலவில் தமிழகத்தில் "நியூட்ரினோ' ஆய்வக மையம்: பிரதமர் மன்மோகன் சிங் தகவல்**

**ஜம்மு,**



இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியான யஷ்பாலுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் பிரதமர் மன்மோகன் சிங். உடன் ஜம்மு - காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா.

வளிமண்டலத்தில் உள்ள அணுத்துகள்கள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் இந்திய ஆய்வகம் (நியூட்ரினோ) தமிழகத்தின் தேனி மாவட்டம் மேற்கு போடிநாயக்கனூர் மலைப்பகுதியில் ரூ. 1,450 கோடி செலவில் அமைக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த இந்த ஆய்வகம் போடிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

101வது இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாடு ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் திங்கள்கிழமை தொடங்கியது. ஐந்து நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டை தொடங்கி வைத்து மன்மோகன் சிங் ஆற்றிய உரை:

உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 2 சதவீதமாவது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கு செலவிடப்பட வேண்டியது அவசியம். இதில் அரசுடன் தனியார் நிறுவனங்களும் இணைந்து தங்களது பங்களிப்பை அளிக்க வேண்டும்.

இயற்பியல் ஆராய்ச்சியின் அடிப்படையில், வளிமண்டலத்தின் அணுத்துகள்கள் குறித்து ஆராயும் இந்திய ஆய்வு மையம் (நியூட்ரினோ) தமிழகத்தின் மேற்கு போடி நாயக்கனூர் மலைப்பகுதியில் ரூ. 1,450 கோடி செலவில் அமைக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த இந்த ஆய்வகம் சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்ட காரணத்தால் அங்கிருந்து போடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

கல்பாக்கம் அணுஉலைத் திட்டம்: கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய அணுஉலை திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும். அதிவேக ஈனுலை அமைப்பதில் இந்திய அணு விஞ்ஞானிகள் காட்டி வரும் ஆர்வம் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் சில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் ஐரோப்பிய அணுசக்தி ஆராய்ச்சி அமைப்பில் (செர்ன்) இந்தியாவும் உறுப்பினராக இணைந்துள்ளது.

மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் விவகாரத்தில் மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்தும் அளிக்கப்படுகின்ற அதேவேளையில், ஆராய்ந்து பார்க்காமல் இதனை ஒதுக்கி தள்ளிவிட முடியாது.

நிலவிலும், செவ்வாய்க்கிரகத்திலும் ஆய்வுகளை மேற்கொள்ள விண்கலன்களை அனுப்பி விண்வெளித்துறையில் இந்தியா சாதனை புரிந்துள்ளது. உயர்தர கணினி தேசிய ஆய்வகத் திட்டத்துக்கு ரூ. 4500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் கூறினார்.

## உள்கட்டமைப்பு வாரியத்தில் வேளாண் துறைச் செயலரை சேர்க்க சட்டத் திருத்தம்

**சென்னை,**

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினராக வேளாண்மைத் துறை செயலரை உறுப்பினராகச் சேர்க்க வகை செய்யும் சட்ட மசோதா பேரவையில் திங்கள்கிழமை நிறைவேறியது.

மசோதாவை தாக்கல் செய்த நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், கடந்த 2013 பிப்ரவரி 4-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்களில் ஒருவராக வேளாண்மைத் துறையின் அரசுச் செயலரை சேர்ப்பது என முடிவு செய்யப்பட்டது. இதற்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 222012) உரிய திருத்தம் செய்ய இந்த மசோதா வகை செய்கிறது என்றார். பின்னர் விவாதம் இன்றி குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த மசோதா நிறைவேறியது.

## தமிழக எல்லையை அடையும் முன்பே உறிஞ்சப்படும் கிருஷ்ணா நீர்

**சென்னை,**



கண்டலேறு அணையிலிருந்து வரும் கிருஷ்ணா நீரை, ஆந்திர விவசாயிகள் வழியிலேயே உறிஞ்சிக் கொள்வதால், தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவு குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி ஆண்டுக்கு 12 டி.எம்.சி.தண்ணீரை ஆந்திர அரசு தமிழகத்துக்கு வழங்க வேண்டும். அதன் அடிப்படையில் கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

ஆனால் ஆந்திர மாநிலம் உப்பளமதகு கிராமம் அருகே கிருஷ்ணா நீர் வழித்தடத்தில் உள்ள கால்வாயில் ஏற்பட்ட சேதம் காரணமாக தமிழகத்துக்கு வர வேண்டிய நீரின் அளவு குறைக்கப்பட்டது.

இதனால் பல மாதங்களாக மிகக் குறைந்த அளவே தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் சேதமடைந்த கால்வாய்க்கு பதிலாக அப்பகுதியில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டு கடந்த மாதம் முதல் அதன் வழியே கிருஷ்ணா நீர் திறந்து விடப்பட்டது.

இதனால் தமிழகத்துக்கு வரும் நீரின் அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கிருஷ்ணா நீர் தமிழக எல்லையை அடையும் முன்னரே ஆந்திர விவசாயிகள் பாசனத்துக்காக தண்ணீரை உறிஞ்சி எடுத்து கொள்கின்றனர். இதன் காரணமாக தமிழகத்துக்கு வழக்கமாக வர வேண்டிய

தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்துள்ளதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியது:

உப்பளமதகு அருகே அமைக்கப்பட்டுள்ள கால்வாய் வழியே விநாடிக்கு 1000 கன அடி நீர் வர முடியும். ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தற்போது 2500 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. இந்த அளவை வைத்துப் பார்த்தால் குறைந்தபட்சம் தமிழகத்துக்கு விநாடிக்கு 500 கன அடி நீராவது வர வேண்டும்.

ஆனால் ஆந்திர விவசாயிகள் பாசனத்துக்காக நீரை உறிஞ்சிக் கொள்வதால் விநாடிக்கு 300 லிருந்து 350 கன அடி தண்ணீரே தற்போது வந்து கொண்டிருக்கிறது. இதனால், தமிழகத்துக்கு வர வேண்டிய சுமார் 1000 மில்லியன் கன அடி நீர்வரத்து குறைந்துள்ளதாகத் தெரிகிறது. கடந்த ஆண்டில் இருந்து இதுவரை ஆந்திரத்தில் இருந்து 2.1 டி.எம்.சி. தண்ணீர் வந்துள்ளது.

வரும் கோடையைக் கருத்தில் கொண்டு, தமிழகத்துக்கு கூடுதல் நீரைத் திறந்துவிடுமாறு ஆந்திர அதிகாரிகளிடம் தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**கால்நடை மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல் மருந்து வழங்கினால் நடவடிக்கை**

**திண்டுக்கல்,**

கால்நடைகளுக்கு வழங்கப்படும் மருந்தை கோழிகளுக்கு வழங்கியதால், 50 கோழிகள் உயிரிழந்தன. இதனையடுத்து சீட்டு இல்லாமல் மருந்து வழங்கும் கடைகள் மீது நடவடிக்கை எடுக்க கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பகுதியைச் சேர்ந்தவர் ராமசாமி. கோழிப் பண்ணை நடத்தி வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன், ராமசாமியின் பண்ணையில் உள்ள கோழிகளுக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை

அடுத்து, அருகில் உள்ள மருந்துக் கடையில் கோழிகளுக்கு மருந்து வாங்கி கொடுத்துள்ளார்.

அதன்பின்னர் 50க்கும் மேற்பட்ட கோழிகள் உயிரிழந்துவிட்டதாகத் தெரிகிறது. இதனால் கோழி இறப்புக்கான காரணம் அறிய, இறந்த கோழியுடன், திண்டுக்கல் கால்நடை ஆராய்ச்சி மையத்தை அணுகி உள்ளார்.

ஆராய்ச்சி மையப் பேராசிரியர்கள் நடத்திய விசாரணையில், கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டிய தாது உப்புக் கலவையை கோழிகளுக்கு கொடுத்தது தெரியவந்தது. கோழிகளுக்கு நோய் பாதிப்பு இருந்தால், அருகில் உள்ள கால்நடை மருந்துவரை அணுக வேண்டும். அவரின் பரிந்துரைப்படியே மருந்து வழங்க வேண்டும் என ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த இணை மற்றும் உதவிப் போராசிரியர்கள் ஆலோசனை கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

இதுகுறித்து ஆராய்ச்சி மையத்தின் இணைப் பேராசிரியர் எஸ்.பீர்முகமது தெரிவித்தது:

கால்நடை மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் வாங்கப்படும் மருந்துகளுக்கு கடைகளில் பில் வழங்குவதில்லை. இதனால் அவர்கள் என்ன மருந்து கொடுத்தாலும், வெளியே தெரியாமல் போய்விடுகிறது. கால்நடை மருத்துவரை அணுகினால் மட்டுமே பாதிப்புகளை தவிர்க்க முடியும் என்றார்.

மாவட்ட கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் தங்கராஜ்:

பில் இல்லாமல் மருந்து வழங்கும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடை மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல், மருந்து வழங்க கூடாது என கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்படும்.

அதேபோல், விவசாயிகளும், நோய் தாக்குதலுக்குள்ளான கால்நடைகள் மற்றும் கோழிகளை கால்நடை மருத்துவரிடம் எடுத்துச் சென்று, அவருடைய பரிந்துரையின் பேரில் மட்டுமே மருந்து வழங்க வேண்டும். விவசாயிகள் ஒத்துழைத்தால் மட்டுமே, இந்த பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி**

**நத்தம்,**

நத்தம் அருகே பி. அரவங்குறிச்சியில் பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு திண்டுக்கல் பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் ஜெயராஜ் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் வழங்கப்படும் மானியம் குறித்து விளக்கினார். மதுரை மத்திய பட்டு வாரிய முதுநிலை தொழில்நுட்ப அலுவலர் செல்வின், பேசுகையில் தோட்டப் பராமரிப்பில் மண் பரிசோதனை பற்றியும் அதில் புழு வளர்க்கும் தொழில் நுட்பங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

பட்டு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து சாணார்பட்டி உதவி பட்டு ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் விளக்கினார். அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜாங்கம் விளக்கிக் கூறினார். முகாமில் இளநிலை பட்டு ஆய்வாளர் விஜயகுமார் மற்றும் பொருள் சிறப்பு அறிஞர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இளநிலை ஆய்வாளர் உடையார் நன்றி கூறினார்.

**"சாத்தனூர் அணை 6-ல் திறப்பு'**

**திருவண்ணாமலை,**

சாத்தனூர் அணையில் இருந்து விவசாயத்துக்காக பிப்ரவரி 6ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படுகிறது என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

அணையின் வலது, இடதுப்புற கால்வாய்கள் வழியாக ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். அணையில் இப்போதுள்ள மொத்தம் 983 மில்லியன் கன அடி நீரில் திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டு பாசன பரப்புக்கான உரிமை நீர் 138 மில்லியன் கன அடி போக, மீதமுள்ள 845 மில்லியன் கன அடி தண்ணீர் அணையின் வலது, இடதுப்புற கால்வாய்கள் வழியாக திறக்கப்படுகிறது.

சாத்தனூர் அணையின் பிக்கப் அணைக்கப்பட்டு பகுதியில் நடைபெறும் விழாவில், தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் அணையைத் திறந்து வைக்கிறார். இதன் மூலம் 7,543 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## முட்டை கொள்முதல் விலை அதிகரிக்கும்: என்இசிசி தகவல்

**நாமக்கல்,**

ஹோஸ்பெட், ஹைதராபாத் மண்டலங்களைக் காட்டிலும் இனிமேல் நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை 15 முதல் 20 காசுகள் வரை அதிகமாக இருக்கும் என்று, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து என்இசிசி நாமக்கல் மண்டலத் தலைவர் பொ.செல்வராஜ் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தி 2012-ஐ காட்டிலும் 2013-ஆம் ஆண்டில் சுமார் 45 முதல் 50 லட்சம் வரை குறைந்தது. பண்ணைகளில் குஞ்சு விடுவது குறைந்ததால், மண்டல முட்டை உற்பத்தி கணிசமாகச் சரிவடைந்துள்ளது. இதேபோல, கர்நாடக மாநிலம், ஹோஸ்பெட், ஹைதராபாத் மண்டலங்களிலும் முட்டை உற்பத்தி குறைந்துள்ளது.

தவிர, தமிழகத்தில் தைப் பொங்கல், தைப்பூசம், சபரிமலை சீசன் போன்ற பண்டிகைக் காலங்கள் முடிவடைந்து, தமிழகம், கேரளத்தில் முட்டை விற்பனை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனடிப்படையில், தமிழகம், கேரளச் சந்தை சீராகி வருவதால், முட்டைகளை வட மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டிய தேவை குறைந்துள்ளது.

எனவே, வட மாநிலங்களுக்கு அனுப்புவதற்காக ஹைதராபாத், ஹோஸ்பெட் மண்டல விலையையொட்டி, நாமக்கல்லிலும் நிர்ணயிக்கப்பட்டு வந்த முட்டை கொள்முதல் விலையை இனி அவ்வாறு நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை.

இதனால், இனிவரும் காலங்களில் ஹைதராபாத், ஹோஸ்பெட் முட்டைக் கொள்முதல் விலையைக் காட்டிலும் நாமக்கல்லில் 15 முதல் 20 காசுகள் வரை கூடுதலாக வைக்க வாய்ப்புள்ளது.

அவ்வாறு கூடுதல் விலை நிர்ணயிப்பதால், நாமக்கல் முட்டை விற்பனையில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்பதால், பண்ணையாளர்கள் பீதியடைந்து விலையைக் குறைத்து விற்க வேண்டாம். இந்தக் கூடுதல் விலை நிர்ணயம் கோடை முடியும் வரை நீடிக்கும் என்றார் அவர்.

## பிப்.16 வரை கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம்

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் வரும் பிப்.16 வரை கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

கரூர் மாவட்டத்தில் பிப்.3 முதல் 16-ம் தேதி வரை இருவார தீவிர கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெற உள்ளது.  பொதுமக்கள் தங்களது கோழிகளை கொண்டு வந்து முகாம்களில் பங்கேற்று தடுப்பூசி போட்டு பயனடையலாம்.

## சிதம்பரத்தில் மலர் கண்காட்சி தொடக்கம்

**சிதம்பரம்,**

சிதம்பரம் மாரியப்பா நகரில் உள்ள ராதா நர்சரி கார்டனில் 25-வது ஆண்டு மலர் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

தினசரி காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் இக் கண்காட்சி மார்ச் 2-ம் தேதி வரை தொடர்ந்து நடைபெறும்.

கண்காட்சியில் மணமுள்ள ரோஜா (நஹ்ரீங்ய்ற்ங்க் தர்ள்ங்), கருப்பு ரோஜா (ஆப்ஹஹ்ரீந் தர்ள்ங்), மிகப்பெரிய டச் ரோஜா (ஈன்ற்ஹ்ரீட் தர்ள்ங்), பட்டன்

ரோஜா, மஞ்சள் ரோஜா, பூத்து 7 நாள்கள் வரை இருக்கும் 7 ஈஹஹ்ள் தர்ள்ங், பன்னீர் ரோஜா உள்ளிட்ட பல்வேறு வண்ண ரோஜாக்கள், சாமந்தி, செவ்வந்தி, புதுவகை செம்பருத்திச் செடிகள், மல்லிகை ரகச் செடிகள் இடம் பெற்றுள்ளன.

மேலும், 9 வகை ஒட்டு மாங்கன்றுகள், சிவப்பு, வெள்ளைக் கொய்யா, ஒட்டுப்பலா, ஒட்டு எலுமிச்சை, ஒட்டு நெல்லி, சாத்துக்குடி,  விதையில்லா மாதுளை, சப்போட்டா, செவ்வாழை, ரஸ்தாளி, லவங்கம், மிளகு, வெற்றிலை உள்ளிட்டவை வைக்கப்பட்டுள்ளன.

இவையல்லாமல் வாஸ்து செடிகள், குரோட்டன்ஸ் வகைகள், வல்லாரை, தூதுவளை, இன்சுலின் போன்ற மக்கள் பயன்பெறும் மருந்து செடிகளும் உள்ளன. தோட்டம் அமைக்க இயற்கை உரங்கள், தோட்டக் கருவிகள், செடிகளுக்கு ஏற்ற மண் ஆகியவையும் கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

செடிகள் 10 சதவீத தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுகின்றன என கண்காட்சி அமைப்பாளரும், அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் வேளாண் துறை பேராசிரியர் ஆர்.எம்.நாச்சியப்பன் தெரிவித்தார்.

## இயற்கை வேளாண்மை கலந்தாய்வுக் கூட்டம்

**செஞ்சி,**

செஞ்சி வட்டம் அவலூர்பேட்டை அகத்தீஸ்வரர் ஆலய வளாகத்தில் சென்னை நல்ல கீரை அமைப்பைச் சேர்ந்த திருமலை, சிவக்குமார், ரவிசங்கர், இயற்கை வேளாண்மை கலந்தாய்வுக் கூட்டத்தை ஞாயிற்றுக்கிழமை நடத்தினர்.

கூட்டத்தில் திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலிருந்தும் புதுச்சேரியிலிருந்தும் இயற்கை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ரசாயனமற்ற, உயிருக்கு கேடு விளைவிக்காத நெற்பயிர், சிறு தானியங்கள், கீரைகளை இயற்கை முறையில் விளைவித்தல் மற்றும் சந்தைப் படுத்துதல், ரசாயன உரங்களால் சீரழிந்த நிலத்தைப் பண்படுத்துதல், அவுரி பயிர்செய்து பூச்சித் தாக்குதலை மட்டுப்படுத்துதல், நவதானியம் விதைத்து

நிலத்தைப் பண்படுத்துதல், பஞ்சகவ்வியம், அமிர்தகரைசல் தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆர்வமுள்ள இளைஞர்கள், இயற்கை வேளாண்மையில் அனைத்து விவசாயிகளையும் இணைக்க முயற்சித்தல் பற்றி விரிவாக கூறப்பட்டது.

உண்ணும் உணவின் நிறங்களின் நன்மை, தீமை, நாட்டு மாடு, கலப்பின மாடு, பாக்கெட் பால், கரந்த பால், மினரல் வாட்டர் பழய உணவு முறை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

**"பாசன நீருக்கு கட்டணம் விதித்தால் தண்ணீரை வீணாக்குவது குறையும்' பெங்களூரு,**

பாசனத்துக்காக திறந்து விடப்படும் தண்ணீருக்கு கட்டணம் விதித்தால், தண்ணீரை வீணாக்குவது குறையும் என்று கர்நாடக அரசு தலைமைச் செயலாளர் கெப்சிக் முகர்ஜி தெரிவித்தார்.

பெங்களூருவில் திங்கள்கிழமை கிருஷ்ணா நீர்ப்பாசன ஆணையத்தின் சார்பில் சொட்டுநீர் பாசனம் குறித்த கருத்தரங்கை தொடக்கிவைத்து அவர் பேசியது:

கோடை காலத்துக்கு முன்பே மாநிலத்தில் உள்ள நதிகள் வற்ற தொடங்கி விட்டன.

பொதுமக்கள் குடிநீருக்கும், பாசனத்திற்கும் வீணாக்காமல் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் தண்ணீரை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டுமென்றால் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது மக்களுக்கு எதையும் இலவசமாக கொடுத்தோம் என்றால் அதைச் சிக்கனப்படுத்தாமல் தேவைக்கு அதிகமாகவே பயன்படுத்துகின்றனர். அதையே கட்டணம் வசூலித்து கொடுத்தால் குறைவாக செலவிடுகின்றனர்.

உதாரணத்துக்கு செல்போன், மின்சாரத்தை கூறலாம். அணைகளிலிருந்து நீர்ப்பாசனத்துக்கு இலவசமாக தண்ணீரைத் தருவதால் அதன் மதிப்பு தெரியாததால் ஒரு சிலர் தேவைக்கு அதிகமாக தண்ணீரை வீணடிக்கின்றனர்.

பாசனத்துக்கு சிறிதளவு கட்டணம் விதித்தோம் என்றால், தண்ணீர் வீணாவது குறையும். உலக அளவில் 4-ஆவது உலகப் போர் தண்ணீரால் வருமென்று கருத்து தெரிவிக்கின்றனர். எனவே, தண்ணீரை தேவைக்கேற்ப சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். தண்ணீரின் அவசியத்தைப் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடத்தப்படும் என்றார் அவர்.

கருத்தரங்கில் மாநில நீர்ப்பாசனத் துறை செயலாளர் குருபாதசாமி, கிருஷ்ணா நீர்ப்பாசன ஆணையத்தின் தலைவர் கபில்மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சாத்தனூர் அணையை திறக்க உத்தரவு**

**திருவண்ணாமலை**: ஏரி பாசனத்திற்காக, சாத்தனூர் அணையை திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இடது, வலது கால்வாய்கள் மூலம் 845 மில்லியன் கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. இதன் மூலம், 7543 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ரூ.1,450 கோடியில் தமிழகத்தில் நியூட்ரினோ ஆய்வு மையம் : பிரதமர் மன்மோகன் சிங் தகவல்**

**ஜம்மு**: தமிழகத்தில், "நியூட்ரினோ அடிப்படையிலான ஆய்வு மையம் துவக்க, 1,450 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஐரோப்பிய அணு ஆய்வு, "செர்ன்' அமைப்பில், நம் நாடும், உறுப்பு நாடாக இணைந்துள்ளது," என, பிரதமர், மன்மோகன் சிங் பேசினார். நாட்டின், 101வது அறிவியல் மாநாடு, ஜம்மு காஷ்மீர் மாநிலம், ஜம்முவில் நேற்று நடந்தது. இதில், துவக்க உரையாற்றிய பிரதமர், மன்மோகன் சிங் கூறியதாவது: அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்க, மத்திய அரசு தயாராக உள்ளது. உலகின் மிகப் பெரிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, அமைப்புகள் மற்றும் திட்டங்களில், நம் நாடும் பங்கேற்க வேண்டும்; அதன் மூலம் சர்வதேச அறிவியல் சமுதாயங்களுடன் ஒன்றிணைய வேண்டும் என்பது அரசின் எண்ணம். அந்த வகையில், புவி ஈர்ப்பு அலை சோதனையில், நாம், மூன்றாவது சோதனை அமைப்பை நிறுவ உள்ளோம். தமிழகத்தில், 1,450 கோடி ரூபாய் செலவில், நியூட்ரினோ அடிப்படையிலான ஆய்வு மையம் துவக்கப்பட உள்ளது. இதன் மூலம், "செர்ன்' எனப்படும், ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்புடன் இணைகிறோம். நம் இந்திய விஞ்ஞானிகள், அணுசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், புவி அறிவியல் துறைகளில், சிறப்பாக செயலாற்றி வருகின்றனர். "பாஸ்ட் பிரீடர் ரியாக்டர்' எனப்படும், அணு உலை தயாரிப்பில், நம் விஞ்ஞானிகள் உலக தரத்தில் செயலாற்றி வருகின்றனர்.

கல்பாக்கத்தில் உருவாக்கப்பட்டு வரும், "புரோட்டோடைப்' அணு உலை கட்டுமானம், இந்த ஆண்டில் நிறைவடையும் என, எதிர்பார்க்கிறேன். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத அணு மின் தயாரிப்பில், உலக அளவில் நாம் முன்னணி இடத்தைப் பிடிப்போம்.நம் அதிதீவிர முயற்சியின் வடிவங்களாக,

"சந்திரயான்' மற்றும் "மங்கல்யான்' பயண முயற்சிகள் அமைந்துள்ளன. பருவமழையை கண்காணிக்கும், "மான்சூன் மிஷன்' துவக்கப்பட்டுள்ளது. இதற்காக, 3,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். "பிடி விதைகள்' விதைகளை ஒட்டுமொத்தமாக ஒதுக்க முடியாது. எனினும், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.இவ்வாறு, பிரதமர், மன்மோகன் சிங் பேசினார்.

## வைகையில் தண்ணீர் திறப்பு மீண்டும் குறைப்பு

**ஆண்டிபட்டி** : வைகை அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் திறப்பு, மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம், வருஷநாடு மலைப்பகுதியில் இந்த ஆண்டு மழை பொய்த்ததால், வைகை அணை நீர் மட்டம் உயரவில்லை. பெரியாறு அணையில் இருந்து வந்த நீரால், வைகை அணைநீர் மட்டம் அதிகபட்சமாக 60 (71) அடி வரை உயர்ந்தது. இருப்பில் இருந்த நீர், பாசனம் மற்றும் குடிநீருக்கு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டதால், அணை நீர் மட்டம் 35 அடியாக குறைந்தது. இதனால், அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு ஜன., 24 ல், வினாடிக்கு 40 கன அடியாக குறைக்கப்பட்டது. குடிநீர் பகிர்மானத்தில் பாதிப்பு ஏற்பட்டதால், பிப்.,1 முதல் திறக்கப்படும் நீரின் அளவு 60 கன அடியாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதால், நேற்று வைகை அணையில் குடிநீருக்கு திறக்கப்படும் நீரின் அளவு, வினாடிக்கு 40 கன அடியாக மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது. அணையில் நேற்றைய நீர் மட்டம் 35.22 அடியாக உள்ளது. அணைக்கான நீர் வரத்து இல்லை.

## கால்நடை தீவனத்திற்காக அறுவடையாகும் நெற்பயிர்

**ஆர்.எஸ்.மங்கலம்**:ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் கால்நடை தீவனத்திற்காக வயல்களில் சாவியாகிப்போன நெற்பயிரை அறுவடை செய்யும் பணியில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழையை நம்பி மானாரியாக நெல் விதைப்பு பணியில் ஏராளமான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மழை பொய்ப்பால், வறட்சியின் பிடியில் இருந்து நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் கூடுதல் பணம் செலவழித்தும் பயிர் சாவியாகி போனதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மேலும், கால்நடைகளை காப்பாற்ற தீவனத்திற்காக வயல்களில் வளர்ச்சி குன்றிய சாவிகளை(பயனற்றது) அறுவடை செய்யும் பணியில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை, பரமக்குடி, முதுகுளத்தூர் உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் இதுபோன்ற பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் விதைப்பு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 36 ஆயிரம் எக்டேரில் 90 சதவீதம் நெற் பயிர்கள் கருகி சாவியாகிப்போனதால் சென்னை, திருப்பூர், சிவகாசி உட்பட பிற மாவட்டங்களுக்கு பிழைப்பு தேடி செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. ஆர்.எஸ்.மங்கலம் பகுதி விவசாயிகள் கூறுகையில்."" கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால் நெல் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் உபரியாக கடலுக்கு செல்லும் நீரை தேக்கிவைக்கும் வகையில் எந்த திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் இப்பகுதியில் உள்ள பெரும்பாலான கண்மாய்கள், குளங்கள் மற்றும் நீர் நிலைகள் நீரின்றி வறண்டு காணப்படுவதால் விவசாய தொழிலை மேம்படுத்த முடியாமல் திணறி வருகிறோம். எனவே, இப்பகுதியில் விசாயம் புத்துணர்வு பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல நல்ல திட்டங்களை செயல்படுத்த வேண்டும்" என்றனர்.

## விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

**ராமநாதபுரம்**: ராமநாதபுரத்தில் தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை சார்பில் ரூ.11 லட்சத்து 86 ஆயிரம் மதிப்புள்ள வேளாண் கருவிகளை, 13 விவசாயிகளுக்கு கலெக்டர் நந்தக்குமார் வழங்கினார். இதில் ரூ.4.51 லட்சம் மானியமாகும். நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் யுவராஜ், உதவி செயற்பொறியாளர்கள் சிதம்பரேசன், ராமன், பொறியாளர்கள் சிவக்குமார், ராமர், பாஸ்கரன் பங்கேற்றனர்.

## கச்சிராயபாளையம் பகுதியில் சம்பா நெல் அறுவடை துவக்கம்

**கச்சிராயபாளையம்** : கச்சிராயபாளையம் பகுதியில் சம்பா நெல் அறுவடை பணிகள் துவங்கியுள்ளன.

கச்சிராயபாளையம் சுற்றுவட்டார கிராமங்களில் நெல் சாகுபடி மும்முரமாக நடந்து வருகிறது. இந்த ஆண்டு பருவ மழை பொய்த் ததால் பெரும் சாவல்களுக்கு இடையில் இப்பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடியை மேற்கொண்டனர்.

தற்போது முன்பட்டத்தில் நடவு செய்த விவசாயிகளின் பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது. இதனைத்தொடர்ந்து அறுவடை பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இந்த ஆண்டு பொன்னி நெல் (75 கிலோ) மூட்டை ஒன்றுக்கு 1450 ரூபாய் வரை விலை போகிறது. குறுவை நெல் வகைகள் ரூ1250 வரை விற்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஏக்கருக்கு 20-25 மூட்டைகள் வரை விளைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். ஏக்கர் ஒன்றுக்கு உழவு செலவு, உரம், ஆள்கூலி உட்பட ரூ15 ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். செலவு போக ரூ 10 ஆயி ரம் வரை லாபம் கிடைக் கும் என்று விசாயிள் எதிர்பார்த்துள்ளனர்.

**வேளாண்துறையின் மானியங்கள்: பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

**பொள்ளாச்சி** : பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய பகுதி விவசாயிகள், வேளாண்துறையால் வழங்கப்படும் மானியங்கள், பயிற்சிகளை கொண்டு பயனடையலாம் என தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில், பல்வேறு காரணங்களால் விவசாயம் நலிவடைந்து வருகிறது. இதை சரிசெய்யும் நோக்கிலும், விவசாய உற்பத்தியை பெருக்கி, உணவு பற்றாக்குறையை போக்கும் நோக்கிலும், மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவற்றில், பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண்துறையால் அளிக்கப்படும் திட்டங்கள், மானியங்கள் குறித்து, வேளாண் உதவி இயக்குனர் பெருமாள்சாமி தெரிவித்தார்.

"ஐசோபாம்' எண்ணெய் வித்து

ஐசோபாம் திட்டத்தின் கீழ், எண்ணெய் வித்துக்களுக்கு மானியம் அளிக்கப்படுகிறது. பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில், எண்ணெய் வித்தான நிலக்கடலை பயிருக்கான விதை, ஒரு ஹெக்டேருக்கு 200 கிலோ வரை மானியத்தில் வழங்கப்படுகிறது. மேலும், வேளாண் கருவிகளான, ஸ்பிரேயர், தெளிப்பு நீர் பாசனம், பாசனக்குழாய் ஆகியவற்றுக்கும் மானியங்கள் வழங்கப்படுகின்றன.

"ஐசோபாம்' மக்காச்சோளம்:

இதில், வேளாண்துறை சார்பாக "செயல் விளக்கத்திடல்' எனும் மக்காச்சோள சாகுபடி குறித்த செய்முறை விளக்கம் அளிக்கப்படுகிறது. பாசனக்குழாய்கள் அமைக்கவும், நுண்ணூட்ட உரமும் மானியங்கள் கிடைக்கின்றன.

விதை கிராமத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகை விதைகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய உணவுப்பாதுகாப்புத்திட்டம்:

இந்த திட்டத்தின் கீழ், பயறு வகை பயிர்களுக்கு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. விதைகள், பயறு வகைகளுக்கான நுண்ணூட்டம், ஜிப்சம், களை மற்றும் பூச்சி கொல்லிகள், "என்.பி.வி.,' எனப்படும் நன்மை தரும் வைரஸ்,

ஸ்பிரேயர், ரோட்டா வீடர், ரெயின் கன், பாசனக்குழாய் ஆகியவற்றிற்கு அதிகபட்சம் 50 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம்:

இத்திட்டத்தில், துவரை நாற்றங்கால் மற்றும் சோளம் ஆகியவற்றுக்கு செயல் விளக்கத்திடல் தரப்படுகிறது. மேலும், சேமிப்பு பயனுக்காக வாங்கும் தார்ப்பாய், பாசனக்குழாய் அமைப்பு, "ரெயின் கன்', சூரியசக்தி கொப்பரை உலர் கலன், சூரியசக்தி பம்ப் செட் மற்றும் மண்புழு உரத்தொட்டி அமைத்தல் ஆகியவற்றிற்கு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. இத்துடன், தென்னங்கன்றுகள், எண்ணெய்ப்பனை நாற்றுகள் ஆகியவற்றையும் மானியத்தில் பெறலாம்.

மேலும் இத்திட்டத்தில், சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், நுண்ணூட்ட உரம், ஜிப்சம், பூச்சி மற்றும் களைக்கொல்லிகள் ஆகியவையும் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.எனவே, பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய விவசாயிகள், இவற்றை பெற, வேளாண் அலுவலர் சுமையா பானு அல்லது தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

## கோடைக்கு முன்பே குவிந்த தர்பூசணி

**திருவள்ளூர்** : கோடை காலம் துவங்குவதற்கு முன்பாகவே, தர்பூசணி பழம், விற்பனைக்கு குவிக்கப்பட்டு உள்ளது. கோடை காலத்தில், வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தணித்துக் கொள்ள உதவும் காரணிகளில், தர்பூசணியும் ஒன்று. சாலையோரங்களில், குன்று போல் குவிக்கப்பட்டு, தர்பூசணி விற்பனைகளை கட்டும். இந்த ஆண்டு, கோடை காலம் துவங்குவதற்கு முன்னதாகவே, அதாவது, நான்கு மாதங்களுக்கு முன்பாகவே, திருவள்ளூரில் தர்பூசணி பழம் விற்பனைக்கு வந்துள்ளது.

திருவள்ளூர், சி.வி.நாயுடு சாலையில், இரு தினங்களாக, தர்பூசணி பழங்கள் கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

இதுகுறித்து கடை உரிமையாளர் ஒருவர் கூறியதாவது:

இரவில் கடும் பனி இருந்தாலும், பகலில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாகவே

உள்ளது. இதனால் தர்பூசணி விற்பனையும் களை கட்டி உள்ளது. தமிழகத்தில் இன்னும், தர்பூசணி விளைச்சல் ஆகாவிட்டாலும், ஆந்திர மாநிலத்தில், விளைந்து, அறுவடை செய்யப்படுகிறது. நாங்கள், காளஹஸ்தியில் இருந்து, தர்பூசணியை வாங்கி வந்து விற்பனை செய்கிறோம்.
அங்கு ஒரு கிலோ ஐந்து ரூபாய் முதல், ஆறு ரூபாய் வரை, வாங்கி, இங்கு, ஒரு கிலோ, எட்டு ரூபாய்க்கும், ஒரு துண்டு, 10 ரூபாய்க்கும் விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கோழிக்கழிச்சல் தடுப்பு முகாம்: கலெக்டர் துவக்கினார்

**விருதுநகர்**: விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் நடந்தது. பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்ற கலெக்டர், அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க, அதிகாரிகளை வலியுறுத்தினார். நேற்று(பிப்.,3 முதல்), 16 வரை, 14 நாட்கள் கோழி கழிச்சல் நோய் (ராணிகட் நோய்) தடுப்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை முகாம்கள் ,மாவட்டம் முழுவதும் நடக்க உள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை ஊழியர்கள், 1.15 லட்சம் கோழிகளுக்கு, தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த தடுப்பு மருந்துகளை, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் செல்லச்சாமி முன்னிலையில், சூலக்கரை கால்நடை பராமரிப்பு துறை டாக்டர் சக்தி தேவியிடம், கலெக்டர் வழங்கி துவக்கி வைத்தார். முதல்வர் தனிப்பிரிவு மனுக்கள், தனிநபர் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். டி.ஆர்.ஓ., முனுசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பிரபாகர், அனைத்துத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**கே.ஆர்.பி., அணையில் மீன் பிடி குத்தகை: ரூ. 1.73 கோடிக்கு தனியாருக்கு உரிமம்**

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணையில், மீன் பிடி குத்தகை உரிமம், இந்த ஆண்டும், ஒரு கோடியே, 73 லட்ச ரூபாய்க்கு, தனியாருக்கு விடப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணையில், அதிக அளவில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு, மீன்வளத்துறை சார்பில், மீன்கள் பிடிக்கப்பட்டு, வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும், விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால், அரசுக்கு குறைந்தளவே லாபம் கிடைத்ததால், கே.ஆர்.பி., அணை உள்பட அரசுக்கு சொந்தமான தமிழகத்தில் உள்ள பல அணைகளில் மீன்பிடி குத்தகை, கடந்த, 2013ம் ஆண்டு முதல் தனியாருக்கு விடப்பட்டது. இதன்படி, கே.ஆர்.பி., அணையில், மீன் குஞ்சுகள் வளர்த்து, மீன்களை பிடித்து விற்பனை செய்ய, கிருஷ்ணகிரியை சேர்ந்த ராஜா என்பவர் கடந்த, 2013ம் ஆண்டு ஃபிப்ரவரி, 1ம் தேதி மீன்பிடி குத்தகை தொகை, வரிகள் உள்பட மொத்தம், ஆண்டுக்கு, ஒரு கோடியே, 78 லட்ச ரூபாய்க்கு குத்தகை எடுத்தார். மேலும், அரசின் உத்தரவுப்படி, மீன் பிடி குத்தகை தொகையில், ஆண்டுதோறும், 10 சதவீத தொகை உயர்த்தி, ஐந்து ஆண்டுகளுக்கு, இவருக்கே குத்தகை விட அரசு உத்தரவிட்டது. இதனையடுத்து, இந்த ஆண்டுக்கான மீன்பிடி குத்தகை, ஒரு கோடியே, 73 லட்சத்து, 69 ஆயிரம் ரூபாய்க்கு, கடந்த ஆண்டு குத்தகை எடுத்த, ராஜவுக்கே உரிமம் வழங்கப்பட்டது. இதன்படி, இவர் நேற்று முன்தினம், ஃபிப்ரவரி, 1ம் தேதி முதல் வரும், 2015 ஜனவரி, 31ம் தேதி வரை, மீன் பிடிக்க இவருக்கு, உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கே.ஆர்.பி., அணையின் மேற்புறத்தில் உள்ள பெத்தாளப்பள்ளி கிராமத்தை சேர்ந்த சிலர் வேண்டுமேன்றே, அணையில் சட்டவிரோதமாக மீன்பிடித்து விற்பனை செய்வதாகவும், இதனால் மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், அந்த பகுதியில் சுமூக தீர்வு காண வேண்டுமென, குத்தகைதாரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**தஞ்சையில் வாடும் நெற்பயிர் தண்ணீர் திறக்க கோரிக்கை**

**தஞ்சாவூர்**: "தஞ்சையில், மேட்டூர் அணை மூடியதால், சம்பா நெற்பயிர் தண்ணீரின்றி வாடும் நிலையில், ஒரு மாதத்துக்கு உய்யக்குண்டான் நீடிப்பு வாய்க்காலில் காவிரி நீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, நவலூர் புதுக்குடி கிராம மக்கள் கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்தனர். தஞ்சை மாவட்டச்ம், தஞ்சை தாலுக்காவிலுள்ள நவலூர் புதுக்குடி கிராம மக்கள், பத்துக்கும் மேற்பட்டோர், ராயமுண்டான்பட்டி விவசாயி ஜீவக்குமார் தலைமையில் தஞ்சை கலெக்டர் அலுவலகத்துக்கு நேற்று வந்தனர். குறைதீர்க்கூட்டத்தில் கலெக்டர் சுப்பையனிடம் அளித்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

தஞ்சை தாலுக்காவிலுள்ள நவலூர் புதுக்குடி கிராமம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில், பாசன பணிகள், உய்யக்கொண்டான் நீடிப்பு வாய்க்கால் மூலமாக வரும் காவிரி நீர் மூலம் நடந்து வருகிறது. தற்போது வயல்களில் சம்பா நெற்பயிர்களில் கதிர்வரும் நேரத்தில், மேட்டூர் அணை வழக்கம்போல குறிப்பிட்ட தேதியில் மூடப்பட்டு விட்டது. இதனால், தண்ணீரின்றி பயிர்கள் அடியோடு, கருகி வாடி வருகின்றன. ஏற்கனவே இரு ஆண்டாக, விவசாயம் பொய்த்து போன நிலையில், தற்போதும் தண்ணீரின்றி, பயிர் நஷ்டத்துக்கு ஆளாகும் நிலைக்கு தஞ்சை விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அதனால், பயிர்களை விளைவிக்கும் வகையில், மேலும் ஒரு மாதத்துக்கு உய்யக்குண்டான் நீடிப்பு வாய்க்காலில், பாசனத்துக்கு தண்ணீர் திறக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

**தேனியில் குறையும் பருத்தி சாகுபடி திசுவாழை, தென்னையில் ஆர்வம்**

**தேனி**: திசுவாழை, கரும்பு, தென்னை, திராட்சை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டும் விவசாயிகள் பருத்தி சாகுபடியில் ஆர்வம் காட்டவில்லை. சொட்டுநீர் பாசன முறையில் பருத்தி சாகுபடி மறைந்து விட்டது.தேனி மாவட்டத்தில் 60 ஆயிரம் ஏக்கருக்கும் அதிக பரப்பில் பருத்தி விளைந்தது. தேனி பருத்தி மார்க்கெட் மாநில

அளவில் இரண்டாவது இடத்தை பிடித்தது.அந்த அளவுக்கு தேனிக்கு பருத்தி வரத்து இருந்தது. தரமற்ற விதைகள், பூச்சி தாக்குதல், விளைச்சல் வீழ்ச்சி, விலை சரிவு, தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் பருத்தி விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்தனர்.இதனால் பருத்தி சாகுபடியை கை விட்டு, மக்காச்சோளம், கரும்பு சாகுபடிக்கு மாறி விட்டனர்.தற்போது சொட்டுநீர் பாசனம் விவசாயிகளுக்கு கை கொடுத்து வருகிறது. இதனால் சொட்டுநீர் பாசனம் அமைத்து திசுவாழை, கரும்பு, தென்னை, திராட்சை, காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பருத்தியை மறந்து விட்டனர். சொட்டுநீர் பாசனத்தில் பருத்தி சாகுபடி காணாமல் போய் விட்டது.

இந்நிலையில் தற்போது பருத்தி தேவை அதிகரிப்பின் காரணமாக, விலை அதிகரித்துள்ளது. பூச்சிநோய் தாக்குதலை தாங்கும் தகுதியுள்ள பி.டி., காட்டன் ரக பருத்தி விதைகள், தாராளமாக கிடைக்கின்றன. இந்த ரகத்தில் விளைச்சலும் அதிகம் உள்ளது.இருப்பினும் பருத்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. விவசாயத்துறை இந்த ஆண்டில் 3 ஆயிரம் ஏக்கரிலாவது பருத்தி விளைவிக்க முயற்சி மேற்கொண்டு வருகிறது.ஆனால், தற்போது 1500 ஏக்கருக்கும் குறைவான நிலத்தில் மட்டும் பருத்தி சாகுபடி நடந்து வருகிறது. திசுவாழை, மக்காச்சோளம், கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள், மீண்டும் பருத்திக்கு மாற தயாராக இல்லை. இது குறித்து விவசாயிகளிடம் கேட்ட போது,""மக்காச்சோளம் ஆண்டுக்கு மூன்று முறை விவசாயம் செய்ய முடிகிறது. விலையும் கிடைக்கிறது.வேலைப்பளுவும் குறைவு.ஆனால்,பருத்தி விளைவிக்க ஒரு ஆண்டுக்கு மேல் ஆகிறது. வேலைப்பளுவும் அதிகம். தற்போது தொழிலாளர் பற்றாக்குறை உள்ள நிலையில் பருத்தி சேகரித்து மார்க்கெட்டில் விற்க வாய்ப்புகள் இல்லை' என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ராயக்கோட்டையில் தக்காளி விலை உயர்வு

**ராயக்கோட்டை,** : திருமண சீசன் களை கட்டியுள்ளதால், ராயக்கோட்டை மார்க்கெட்டில் தக்காளி விலை அதிகரித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை தினசரி தக்காளி மார்க்கெட்டில், கிரேடு கணக்கில் தக்காளி ஏலம் விடப்படுகிறது. (கிரேடு என்பது 25 கிலோ எடை). தற்போது திருமண சீசன் களை கட்டியுள்ளதால், தக்காள¤ இந்த வாரம் ரூ.3க்கு விலை போனது. கிரேடு ஒன்று ரூ.90க்கு விற்பனையானது. வரத்து 4 ஆயிரம் கிரேடாக இருந்தது. வெளி மாநில வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டதால், வரும் நாட்களில் தக்காளி விலை, மேலும் உயருமென விவசாயிகள் தெரிவித்தனர். இதே போல் ராயக்கோட்டை மார்க்கெட்டிற்கு காய்கறிகள் வரத்தும் அதிகமாக இருந்தது. அதில் நேற்றைய காய்கறிகளின் விலை விபரம்: பீன்ஸ் ரூ.22, காலிபிளவர் (மூட்டை) ரூ.120, முட்டைகோஸ் (மூட்டை) ரூ.150, கத்தரிக்காய் ரூ.7, பீட்ருட் ரூ.7, கேரட் ரூ.27, முள்ளங்கி ரூ.7, பாகற்காய் ரூ.12, பந்தல் அவரை ரூ.16, பச்சை மிளகாய் ரூ.18, தக்காளி ரூ.3க்கு விலை போனது. காய்கறி வரத்து 40 டன்னாக இருந்தது. தக்காளி விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

**வாலாஜாபாத்**, : வாலாஜாபாத் வேளாண்மை அலுவலகம் சார்பில், விவசாயிகளுக்கான கோடைகால பயிற்சி முகாம் வையாவூர் ஊராட்சி நூலக வளாகத்தில் நேற்று நடந்தது. உதவி இயக்குனர் முருகன் தலைமை வகித்தார்.

முகாமில், கோடை காலத்தின்போது மக்கா சோளம், உளுந்து, பச்சை பயிறு போன்றவற்றை சாகுபடி செய்வதன் மூலம் அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் ஜெகதா பயிற்சி அளித்தார். பூசிவாக்கம் கிராமத்தில் இன்று கோடைகால பயிற்சி முகாம் நடக்கிறது.

**நதிகள் இணைப்பு குறித்த கலந்தாய்வுக் கூட்டம்**

**கிருஷ்ணகிரி**,: கிருஷ்ணகிரியில் நதிகள் இணைப்பு குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரியில் நதிகள் இணைப்பு குறித்த கலந்தாய்வு கூட்டம் நியூ லைப் தொண்டு நிறுவன இயக்குனர் ஞானசேகரன் தலைமையில் நேற்று நடந்தது. மத்திய அரசின் நதிகள் இணைப்பு உயர்மட்டக் குழு உறுப்பினரும், தேசிய நீர்வழி சாலை திட்டத்தை உருவாக்கியவருமான பொறியாளர் காமராஜ் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில் நதிகள் இணைப்பின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள், நதிகளை இணைக்காவிட்டால் ஏற்படும் விளைவுகள் போன்றவை குறித்து பொறியாளர் காமராஜ் பேசினார். கூட்டத்தில் இந்திய நதிகள் இணைப்பு இயக்க நிர்வாகிகள் சேகர், ராஜாமுத்தாச்சாரி, சுபாஷினி, அசோக்குமார், சந்திரசேகர், சுப்பிரமணி, மாரிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தின் போது நதிகள் இணைப்பை அரசு விரைவில் நிறைவேற்ற செய்ய வேண்டிய பணிகள் குறித்தும், அதற்காக தமிழக அரசு தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்தி, ஓசூரில் இருந்து சென்னை வரை பாத யாத்திரை மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. டாக்டர் மேரி நன்றி கூறினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இந்திய நதிகள் இணைப்பு இயக்கத்தின் தேசிய தலைவர் சர்தார் செய்திருந்தார்.

**உளுந்து, பாசிப்பயறு சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

**நாமக்கல்**, : கபிலர்மலை வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ வெளியிட்டுள்ள அறிக்கை:

கபிலர்மலை வட்டாரத்தில், கரும்பு மற்றும் மரவள்ளி நடவு பணி, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகள் ஊடுபயிராகவும், நெல் அறுவடை செய்தபின், தனிப்பயிராகவும், உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து, குறுகிய காலத்தில், கூடுதல் வருவாய் பெறலாம். இந்த ஆண்டு, மழை குறைவாக பெய்துள்ளதாலும், நீர் நிலைகளில், தண்ணீர் குறைந்து வருவதாலும், நெல் அறுவடை செய்த வயல்களில், குறுகிய காலப்பயிராக உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து பயனடையலாம்.  தனிப்பயிராக சாகுபடி செய்ய, ஏக்கருக்கு 8 கிலோ விதையும், ஊடுபயிருக்கு, 4 கிலோ விதையும் போதுமானது. தற்போது, சாகுபடி செய்துவரும் மரவள்ளி மற்றும் கரும்பில் ஊடுபயிராக, உளுந்து அல்லது பாசிப்பயறு சாகுபடி செய்து, உபரி வருமானம் பெறலாம்.

ஒரு கிலோ விதைக்கு, 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் அல்லது 2 கிராம் கார்பென்டாசிம், இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை, பூ பூக்க ஆரம்பிக்கும்போது, ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு சராசரியாக, 600 கிலோ தனிப்பயிரிலும், 250 கிலோ ஊடுபயிரிலும் மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற விதை உளுந்து, போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

**முட்டை விலை 330 காசு ஐதராபாத் மண்டலத்தை விட நாமக்கல் முட்டைக்கு அதிக விலை**

**நாமக்கல்**, : ஐதராபாத் மண்டலத்தை விட நாமக்கல் முட்டைக்கு அதிக விலை கிடைக்கும் என, என்இசிசி நம்பிக்கை தெரிவித்துள்ளது. அதே போல் முட்டையின் விலை 330 காசாக தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் டாக்டர் செல்வராஜ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி கடந்த ஆண்டை காட்டிலும் தினமும் 40 முதல் 50 லட்சம் வரை குறைந்துள்ளது. பண்ணைகளில் குஞ்சு பொறிப்பது குறைந்ததால், மண்டல முட்டை உற்பத்தி கணிசமாக குறைந்துள்ளது. இதே போல ஹோஸ்பெட் மற்றும் ஐதராபாத்திலும் முட்டை உற்பத்தி குறைந்துவிட்டது. தமிழகத்தில் தைப்பூசம் மற்றும் கேரளாவில் சபரிமலை சீசன் முடிந்து விட்டதால், தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக நாமக்கல்லில் உற்பத்தியாகும் முட்டைகள், நமது மண்டலத்துக்குரிய சந்தைகளான தமிழகம் மற்றும் கேராளவிலேயே விற்பனையாகிவிடும்.

வட மாநிலங்களுக்கு நாமக்கல் முட்டைகளை அனுப்ப தேவையில்லை. அதற்காக ஐதராபாத், ஹோஸ்பெட் மண்டலங்களின் முட்டை விலையை அனுசரித்து, நாமக்கல் மண்டலத்தில் விலை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியமும் இனி ஏற்பாடாது. அதை விட 15 முதல் 20 காசு உயர்த்தி நாமக்கல் முட்டைக்கு விலை நிர்ணயம் செய்யலாம். வரும் கோடைக்காலம் முடியும் வரை நாமக்கல்லில் முட்டை விலையை உயர்த்தி விற்பனை செய்யலாம். எனவே கோழிப்பண்ணையாளர்கள் முட்டையை விலை குறைத்து, விற்பனை செய்யவேண்டாம். நாமக்கல் மண்டலத்தில் தற்போது முட்டை விலையை 330 காசாகவே தொடர்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு டாக்டர் செல் வராஜ் தெரிவித்துள்ளார்.

**காலிங்கராயனில் தண்ணீர் நிறுத்தம் பராமரிப்பு பணி துவங்க ஏற்பாடு**

ஈரோடு, : காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால் விரைவில் ரூ.50 கோடி செலவில் பராமரிப்பு பணிகள் தொடங்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலிங்கராயன் வாய்க் கால் மூலம் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வருகின்றது. நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

ஏப்ரல் மாதம் தண்ணீர் நிறுத்தப்பட்டு மீண்டும் ஜூன் மாதம் பாசனத்திற்கு திறக்கப்படும். ஆனால் கடந்த ஆண்டில் வாய்க்காலில் ரூ.40 கோடி செலவில் கான்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் பேபி கால்வாய் அமைத்தல் உள்ளிட்ட பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்ததால் ஆகஸ்ட் மாதம் தான் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து ஒரு போகம் நெல் பயிரிடப்பட்டு அறுவடையும் முடிவடைந்துவிட்டது.

இந்நிலையில் இரண்டாம் கட்டமாக வாய்க்காலில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் 31ம் தேதி இரவு பாசனத்திற்கு திறக்கப்பட்டிருந்த தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டது. இதையடுத்து விரைவில் ரூ.50 கோடி செலவில் இரண்டாம் கட்டமாக 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு பராமரிப்பு பணிகள் தொடங்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மஞ்சள் பயிர்கள் கருகும் அபாயம்

காலிங்கராயன் வாய்க்காலில் இந்த ஆண்டு முதல்போகம் நெற்பயிர்கள் அறுவடை செய்யப்பட்டுவிட்டது. ஆனால் மஞ்சள் பயிர்கள் தற்போது தான் பயிரிடப்பட்டுள்ளது. 4500 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இம்மாதம் 15ம் தேதியில் இருந்து 40 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும் அதற்கு பின்னர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் பாசன விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**வேளாண், தோட்டக்கலைத்துறையில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் பணியில் சேர அழைப்பு**

**ஈரோடு**, : ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வடிப்பகுதி திட்டங்களுக்கு காலியாக உள்ள 3 நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் பணியிடங்களில் சேர விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
வேளாண்மை, தோட்டக்கலைத்துறையில் முதுகலைப்பட்டம் அல்லது வேளாண்மை, தோட்டக்கலை துறை ஒவ்வொரு பாடத்தையும் நன்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தெளிவாக விளக்கியும் பின் அந்த பாடங்களிலிருந்து இதுவரை கேட்கப்பட்ட கேள்விகள், இனிமேல் கேட்கவிருக்கும் கேள்விகள் என விரிவாக அலசுகிறார்கள்.
இங்கு நாங்கள் எழுதுவது குறைவு. ஆனால் கற்பது அதிகம் என்கிறார் நாமக்கல்லைச் சேர்ந்த விக்னேஷ்வர். ஒரு வகுப்பு என்பது ஒன்றரை மணிநேரம். அந்த ஒவ்வொரு வகுப்பும் முடிந்தவுடனே தேர்வு நடத்துகிறார்கள். கோள்குறி வகையாக இல்லாமல் நேரடியாக நாம் பதில் அளித்தாக வேண்டும். ஆகவே வகுப்புகளில் கவனம் சிதறாமல் கவனித்தாக வேண்டும். இது போன்று ஒரு நாளைக்கு நான்கு முதல் ஐந்து தேர்வுகள் நடத்துகிறார்கள். இது முற்றிலும் புதிய முறை என்கிறார் சேலத்தைச் சேர்ந்த கார்த்திக்.
சமச்சீர் கல்வி புத்தகங்களுக்கென தேர்வு அட்ட வணை தயாரித்து அதன்படி தேர்வு நடத்தப்படுகிறது. டி.என்.பி.எஸ்.சி தேர்வுகளில் வெற்றிபெற்று தற் போது அதிகாரிகளாக பணிபுரிபவர்களைக் கொண்டு சனி. ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
பாடங்களை வெறுமனே டிக்டேட் செய்யாமல் விளக்கமாக நடத்துதல், வகுப்புத்தேர்வு, வாராந்திர தேர்வு நடத்துதல், குழு விவாதங்கள் நடத்துதல், குறிப்பிட்ட கால இடைவெளியில் ஐ.ஏ.எஸ். மற்றும் குரூப் 1 தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களுடன் மாணவர்களுக்கு கலந்துரையாடல் நடத்துகிறோம். வரவிருக்கும் தேர்வுகளில் எங்கள் மாணவர்களின் வெற்றி வீதம் இதை எதிரொலிக்கும் என்கிறார் பயிற்சி மைய இயக்குநர் சத்யா.

சமூக, பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமப்புறத்தைச்சேர்ந்த இருபது பேருக்கு பாட கையேடுகளுடன் கூடிய பயிற்சியை ஒரு வருடத்திற்கு முற்றிலும் இலவசமாக சத்யா ஐ.ஏ.எஸ். அகாடமி அளித்துவருகிறது. ஈரோட்டில் கிளை துவங்கிய ஐந்தே மாதங்களில் மேற்கு மாவட்டங்களின் அடையாளமாக சத்யா ஐ.ஏ.எஸ். அகாடமி உருவெடுத்துள்ளது.

டி.என்.பி.எஸ்.சி மற்றும் டெட் தேர்வுகள் குறித்த சந்தேகங்களுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் சத்யா ஐ.ஏ.எஸ். அகாடமியின் ஈரோடு கிளையை 0444 4446909 மற்றும் 7401541948 என்ற எண்ணில் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

இன்றைய வேளாண் செய்திகள்

**மரபணு மாற்று பயிர்களுக்கு ஆதரவு: தமிழ்நாட்டில் ரூ.1,450 கோடியில் அணு ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும் பிரதமர் மன்மோகன்சிங் பேச்சு**



**ஜம்மு,**

தமிழ்நாட்டில் ரூ.1,450 கோடியில் அணு ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். மரபணு மாற்று பயிர்களுக்கு ஆதரவாகவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

101–வது அறிவியல் மாநாடு

ஜம்முவில் 101–வது அறிவியல் மாநாடு நடந்து வருகிறது. ‘வளர்ச்சியை உள்ளடக்கிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்’ என்ற கருத்தை அடிப்படையாக கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது:–

பாதுகாப்பு நிச்சயம் உறுதி செய்யப்பட்டு இருக்கும் நிலையில், மரபணு மாற்ற பயிர்கள் மீதான அறிவியல் பூர்வமற்ற, தவறான கருத்துகளுக்கு நாம் அடிபணிந்துவிடக் கூடாது. வேளாண்மை வளர்ச்சிக்காக நமது அரசு இதுபோன்ற புதிய தொழில்நுட்பங்களுக்கு ஊக்கம் அளிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடும். விளைச்சலை அதிகரிக்கும் ஆற்றல் உயிரி தொழில்நுட்பத்துக்கு மிகவும் அதிகம் உள்ளது.

பசுமை புரட்சி

சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் முன்னேற்றம் அடைய, சமூக பாதுகாப்பு மற்றும் மாற்று தொழில்நுட்பங்கள் குறித்து விளக்குவதற்காக மக்களுடனான தொடர்புகளையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் விஞ்ஞானிகள் அதிகப்படுத்த வேண்டும்.

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்தவும் நிரந்தர பசுமைப் புரட்சிக்கான தேசிய அளவில் ஒரு திட்டம் தொடங்கப்படும். இது வேளாண் விஞ்ஞானிகளின் அறிவுத்திறனை பரிசோதனை செய்வதாக அமையும். பருவகாலத்துக்கு ஏற்ற வேளாண்மை, நவீன உயிரி தொழில்நுட்பம் போன்றவை மிகவும் பயன் தருபவை.

<u>தமிழகத்தில் அணு ஆராய்ச்சி</u>

நாட்டின் மொத்த உற்பத்தியில் குறைந்தபட்சம் 2 சதவீதமாவது நாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துக்காக செலவழிக்க வேண்டும். இது அரசு மற்றும் தொழில் நிறுவனங்களிடம் இருந்து வரவேண்டும்.

அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக தேசிய அளவில் ரூ.9 ஆயிரம் கோடியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் தமிழ்நாட்டில் ரூ.1,450 கோடியில் ஒரு அணு ஆராய்ச்சி நிலையம் (நியூட்ரான்–புரோட்டான்களுக்கு இடையே ஏற்படும் செயல்கள் பற்றியது) அமைக்கப்படுவதும் அடங்கும்.

இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

**முதல் 9 மாதங்களில் தேயிலை உற்பத்தி 9 சதவீதம் வளர்ச்சி**



**புதுடெல்லி,**

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) தேயிலை உற்பத்தி 9 சதவீதம் அதிகரித்து 111.69 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 102.50 கோடி கிலோவாக இருந்தது. அசாம்

மற்றும் மேற்கு வங்காளம் மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்ததே இதற்கு காரணம் என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

அசாம் மாநிலத்தில் தேயிலை உற்பத்தி 5 சதவீதம் அதிகரித்து 57.71 கோடி கிலோவிலிருந்து 60.78 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. மேற்கு வங்காளத்தின் தேயிலை உற்பத்தி 11 சதவீதம் அதிகரித்து 26.20 கோடி கிலோவிலிருந்து 29 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட தென்மாநிலங்களின் மொத்த தேயிலை உற்பத்தி 16 சதவீதம் அதிகரித்து 16.84 கோடி கிலோவிலிருந்து 19.59 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. மொத்த தேயிலை உற்பத்தியில் அசாம், மேற்கு வங்காளம் மற்றும் தென்மாநிலங்களின் பங்களிப்பு 90 சதவீதமாகும்.

சி.டி.சி. ரக தேயிலை எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் நம்நாட்டில் இருந்து ஆர்த்தோடாக்ஸ் ரக தேயிலையை அதிகளவில் இறக்குமதி செய்கின்றன. சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. அதே சமயம் தேயிலை நுகர்வில் நம்நாடு முன்னணியில் உள்ளது.

**சதுரங்கப்பட்டினத்தில் மீன்வளத்தை பெருக்க ரூ.82 லட்சத்தில் கடலில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கும் பணி**



**கல்பாக்கம்,**

சதுரங்கபட்டினத்தில் மீன்வளத்தை பெருக்க ரூ.82 லட்சத்தில் கடலில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கும் பணியை சென்னை அணுமின் நிலைய இயக்குனர் தொடங்கி வைத்தார்.

**நலத்திட்டங்கள்**

காஞ்சீபுரம் மாவட்டம் கல்பாக்கத்தில் இயங்கி வரும் சென்னை அணுமின்நிலையத்தின் கிராம நலத்திட்டத்தின் கீழ், கல்பாக்கம் அடுத்த வெங்கப்பாக்கம், புதுப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், வாயலூர் உள்பட சுற்றுப்புற கிராம பள்ளி மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கடலோர மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடந்த 2012–ம் ஆண்டு புதுப்பட்டினம் கடலில் மீன்வளத்தை பெருக்க கடலுக்குள் 5 கி.மீ தொலைவில் செயற்கை பவளப்பாறைகளை அமைத்தது. இதனால் அப்பகுதி மீனவர்கள் அதிக அளவில் மீன்பிடித்து வருகின்றனர்.

**பவளப்பாறைகள் அமைக்கும் பணி**

இதனையடுத்து கல்பாக்கம் அடுத்த சதுரங்கப்பட்டினம் கிராமத்திலும் கடலில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்க சென்னை அணுமின்நிலையம் முடிவு செய்தது. இதற்கான பூமி பூஜை விழா சதுரங்கப்பட்டினம் கிராமம் மெய்யூர் குப்பத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சென்னை அணுமின்நிலைய இயக்குனர் டி.ஜே.கோட்டீஸ்வரன் தலைமை தாங்கி, தொடங்கி வைத்தார். முதன்மை கண்காணிப்பாளர் சத்யநாராயணா, பொதுமேலாளர்(மனிதவளம்) டி.தனசேகரன், நிலைய கிராம நலக்குழுத்தலைவர் சுரேஷ், கடல்ஆராய்ச்சியாளர் முகமது காசிம் ஆகியோர்

முன்னிலை வகித்தனர். நிலைய துணை மேலாளர்(மனிதவளம்) டி.நிர்மலாதேவி வரவேற்றார்.

**<u>ரூ.82 லட்சம்</u>**

ரூ.82 லட்சத்து 22 ஆயிரத்து 550 மதிப்பீட்டில் வட்டம், முக்கோணம் போன்ற வடிவங்களில் சிமெண்டு மற்றும் கம்பிகள் பயன்படுத்தி செயற்கையாக பவளப்பாறைகள் அமைத்து இந்த பகுதி கடலில் ஆழத்தில் இடுவதால் அதில் மீன்கள் வசித்து இனப்பெருக்கம் செய்யும். இதன் மூலம் சதுரங்கப்பட்டினம் வடக்கு, தெற்கு, மெய்யூர் குப்பங்கள் மற்றும் வாயலூர், உய்யாலிக்குப்பம் மீனவர்கள் பயனடைவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் வாயலூர் ஊராட்சி மன்ற தலைவர் அசோகன், தொண்டு நிறுவன தலைவர் ஜான்சுரேஷ், அணுமின்நிலைய ஊழியர்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்ததால் காவிரி கரையோர பகுதிகளில் விவசாய பணிகள் மும்முரம்**



**ஏரியூர்,**

மேட்டூர் அணையின் நீர் மட்டம் குறைந்து வருவ தால் ஏரியூர், நாக மரை உள்ளிட்ட 20–க் கும் மேற்பட்ட காவிரி கரையோர பகுதி களில் விவசாய பணி கள் மும்முரமாக நடை பெற்று வருகிறது.

**மேட்டூர் அணை**

கர்நாடக மாநிலத்தில் கன மழை பெய்தால் அதன் உபரி நீர் காவிரி ஆற்றில் கரை புரண்டு தமிழகத்தின் நுழை விடமாக பிலிகுண்டுலு வழி யாக ஒகேனக்கல் வந்து அங் குள்ள அருவிகளில் ஆர்ப் பரித்து கொட்டும். இந்த தண்ணீர் நாகமரை, ஏரியூர், வழியாக சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் தேங்கி நிற்கும். இதனால் மேட்டூர் அணை கடல் போல் ரம்மி யமாக காட்சி அளிக்கும். காவிரி ஆற்றில் இருந்து சுமார் 50 ஆயிரம் கனஅடி தண்ணீர் செல்லும் போது அதன் தேக் கம் ஒகேனக்கல் மெயின் அருவி கரை தண்ணீர் தேங்கி நிற்கும். இதனால் காவிரி கரை யோர பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் படும். மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் சேலம் மாவட் டத்திற்கும் குடிநீர் வினி யோகம் செய்யப்பட்டு வரு கிறது.

**தண்ணீர் வரத்து குறைந்தது**

கடல் போல் காட்சி அளிக் கும் மேட்டூர் அணைக்கு தற்போது தண்ணீர் வரத்து 51.70 அடியாக குறையத் தொடங்கி உள்ளது. இதனால் மேட்டூர் அணையின் நீர்தேக்க பகுதியில் மூழ்கி இருந்த கிறிஸ்தவ இரட்டை கோபுரங்கள், நந்தி சிலை ஆகியன வெளியே தெரிய தொடங்கியது. மேலும் பண்ணவாடி நீர்தேக்க பகுதியில் மூழ்கி இருந்த புராதன நினைவு சின்னமான ஜலகண்டேஸ்வரர் கோவில் கோபுரமும் வெளியே தெரிய தொடங்கி உள்ளது.

பண்ணவாடி நீர்தேக்க பகுதியில் நந்தி சிலைக்கு பின்புறம் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் கோபுரத்தின் மேற்பகுதி சிதைந்த நிலையில் தற்போது வெளியே தெரிகிறது. தற்போது கிறிஸ்தவ இரட்டை கோபுரம் வெளியே தெரிந்து வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால் நீர்

தேக்கப்பகுதிகளில் மூழ்கி இருந்த புராதன சின்னங்கள் இனி மெல்ல, மெல்ல வெளியே தெரிய தொடங்கி உள்ளது.

<u>விவசாய பணி மும்முரம்</u>

தர்மபுரி மாவட்டத்தின் எல் லையான நாகமரை, மஞ்சார அள்ளி உள்ளிட்ட ஊராட்சி களுக்குட்பட்ட கொண்டை யனூர், குருக்கலையனூர், ஒட்டனூர், செல்லமுடி, சித் திரைப்பட்டி, ஏர்கோல் பட்டி, ராம கொண்டஅள்ளி மற்றும் காவிரி கரையோரத்தில் உள்ள சுமார் 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. மலைப் பகுதியான இந்த பகுதிகளில் காவிரி ஆற்றின் கரை யோரத் தையே வாழ்வாதார மாக கொண்டுள்ளனர். பரந்து விரிந்து கடல் போல் காட்சி அளித்த காவிரி ஆறு இந்த பகுதிகளில் குட்டைபோல் காட்சி அளிக்கிறது.

இதனால் பொதுமக்கள், விவசாயிகள் காவிரி ஆற்றின் கரையோரத்தில் விவசாய பணிகளை மேற்கொண்டு உள்ளனர். கடந்த ஒரு மாதத் திற்கு முன்பு உழவு பணிகளை மேற்கொண்ட விவசாயிகள் நிலக்கடலை, கேழ்வரகு, கம்பு, சோளம், ராகி, எள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்டவை பயிர் செய்துள்ளனர். மேலும் காய்கறிகள் ஆங்காங்கே உழவு பணிகளும், விவசாய பணி களும் மும்முரம் அடைந்துள் ளது. மேட்டூர் அணைக்கு காவிரி ஆற்றில் இருந்து தண் ணீர் வருவதற்கு 2 போக பயிர் களை சாகுபடி செய்து விடுவ தாக விவசாயிகள் மகிழ்ச் சியுடன் தெரிவித்தனர்.

**உத்தனப்பள்ளி அருகே சானமாவு காட்டிற்கு குட்டிகளுடன், மீண்டும் வந்த 35 யானைகள் விவசாயிகள் கவலை**



**ராயக்கோட்டை**

உத்தனப்பள்ளி அருகே உள்ள சானமாவு காட்டிற்கு குட்டிகளுடன் மீண்டும் 35 யானைகள் வந்தன. இந்த யானைகள் விவசாய பயிர்களை நாசம் செய்யலாம் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>யானைகள் அட்டகாசம்</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் யானைகள் அதிக அளவில் உள்ளன. இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கர்நாடகா மாநிலம் பன்னார்கட்டா வனப்பகுதியில் இருந்து 130 யானைகள் தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்கு வந்தன.

அவை ஓசூர், தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் பல குழுக்களாக பிரிந்து விவசாய பயிர்களை நாசம் செய்து வந்தன. உத்தனப்பள்ளி அருகே சானமாவு காட்டில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு 60 யானைகள் இருந்து அட்டகாசம் செய்தன. அவற்றை வனத்துறையினர் போராடி விரட்டினார்கள்.

<u>குட்டிகளுடன் வந்த யானைகள்</u>

தேன்கனிக்கோட்டை வனப்பகுதி வழியாக கர்நாடகா வனப்பகுதிக்கு சென்ற அந்த யானைகள் கூட்டம் மீண்டும் தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு வந்து விட்டன. அவை தேன்கனிக்கோட்டை வனப்பகுதியையொட்டி உள்ள கிராமங்களுக்குள் புகுந்து விவசாய பயிர்களை நாசம் செய்தன.

இந்த நிலையில், அந்த யானைகள் கூட்டத்தில் 35 யானைகள், தனியாக பிரிந்து, ராயக்கோட்டை அருகே உள்ள ஊடேதுர்க்கம், சினிகிரிப்பள்ளி காப்புகாடு வழியாக உத்தனப்பள்ளி அருகே உள்ள சானமாவு காட்டிற்கு நேற்று காலை வந்து விட்டன. இவற்றில் 3 குட்டிகளும் உள்ளன.

விவசாயிகள் கவலை

இந்த யானைகள் சானமாவு காட்டில் பல குழுக்களாக பிரிந்து நேற்று சுற்றி திரிந்தன. அவற்றில் 3 யானைகள் தனியாகவும், ஒரு ஒற்றை யானை தனியாகவும் பல இடங்களுக்கு சென்று வந்தன. இந்த யானைகள் கூட்டமாக இரவு அருகில் உள்ள உத்தனப்பள்ளி, பென்னிக்கல், சானமாவு, பீர்ஜேப்பள்ளி, குடிசாதனப்பள்ளி பகுதிகளுக்கு சென்று பயிர்களை நாசம் செய்ய வாய்ப்பு உள்ளது.

உத்தனப்பள்ளி மற்றும் சுற்று வட்டார பகுதி விவசாயிகள், கடந்த 10 நாட்களாக யானைகள் தொல்லையின்றி நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் அவர்களுக்கு சோதனையாக யானைகள் கூட்டம் மீண்டும், சானமாவு காட்டிற்கு வந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.41 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை**



**அந்தியூர்**,

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.41 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை ஆனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. இதற்கு அந்தியூரை சுற்றியுள்ள கிராமம் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து வந்திருந்த விவசாயிகள் விவசாய விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது.

ஏலத்துக்கு 25 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் சிறிய தேங்காய் ஒன்று 5 ரூபாய்க்கும், பெரிய தேங்காய் ஒன்று 14 ரூபாய்க்கும் என மொத்தம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டன.

கொப்பரை தேங்காய் 120 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 6 ஆயிரத்து 915 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 7 ஆயிரத்து 815 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு விற்கப்பட்டன.

<u>மக்காச்சோளம்</u>

வெள்ளை எள் 20 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 11 ஆயிரத்து 719 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 13 ஆயிரத்து 689 ரூபாய்க்கும் என மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டன.

ஆமணக்கு 8 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 469 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 229 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.16 ஆயிரத்துக்கு விற்கப்பட்டன.

மக்காச்சோளம் 350 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.1,116–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,189–க்கும் என மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு விற்கப்பட்டன.

<u>நிலக்கடலை</u>

துவரை 700 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 419 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 229 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.25 லட்சத்துக்கு விற்கப்பட்டன.

நிலக்கடலை 600 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் பச்சை நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 2 ஆயிரத்து 400 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 3 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. காய்ந்த நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 2 ஆயிரத்து 456 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 3 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் என மொத்தம் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டன. விவசாய விளைபொருட்கள் மொத்தம் 41 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டன.

சேலம், தர்மபுரி, திருப்பூர், மேட்டுப்பாளையம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்து சென்றனர்.

**தஞ்சையில் இருந்து சரக்குரெயில் மூலம் ஈரோட்டுக்கு 960 டன் நெல்மூட்டைகள் அரவைக்கு கொண்டு செல்லப்பட்டன**



**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்துசரக்கு ரெயில் மூலம் ஈரோட்டுக்கு 960 டன் நெல் மூட்டைகள் அரவைக்கு கொண்டு செல்லப்பட்டன.

**நெற்களஞ்சியம்**

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும்.

இவ்வாறு இருப்பு வைக்கப்படும் நெல் மூட்டைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், தஞ்சையில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு அனுப்பி வைக்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அறுவடை செய்யப்பட்ட

நெல் மூட்டைகள் சென்னை, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, திருநெல்வேலி உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

**960 டன்**

இதே போல் நேற்று தஞ்சையில் இருந்து ஈரோட்டுக்கு சரக்கு ரெயில் மூலம் 960 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன. இதற்காக நெல் மூட்டைகள் சேமிப்புக்கிடங்கு மற்றும் கொள்முதல் நிலையங்களில் இருந்து லாரிகளில் கொண்டுவரப்பட்டு ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

**வேளாண் பொருட்களின் விலை விவரம்**

**அரியலூர்,**

அரியலூர் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப் பெற்றுள்ள வேளாண் பொருட்களின் விலை விவரம் வருமாறு:– மக்காச்சோளம் 100 கிலோ ரூ.1,171, வெள்ளை சோளம் (100 கிலோ) ரூ.1,371, மஞ்சள் சோளம் (100 கிலோ) ரூ.2,100. இத்தகவலை வேளாண் விற்பனைக் கூட அதிகாரி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் வேளாண்மை விற்பனை கூடத்தில் விலை விபரம் வருமாறு ;– மணிலா பயறு (80 கிலோ) ரூ.3,728 எள் (80 கிலோ) ரூ.5,771.

**புல்லூர் பிர்கா விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கப்படும் அமைச்சர் சுந்தர்ராஜன் தகவல்**



**தொண்டி,**

புல்லூர் பிர்கா விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கப்படும் என்று அமைச்சர் சுந்தர் ராஜன் வழங்கினார்.

**<u>விலையில்லா பொருட்கள்</u>**

திருவாடானை யூனியனில் தமிழக அரசின் விலையில்லா கிரைண்டர், மிக்சி, மின் விசிறி வழங்கும் விழா ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திருமால்சாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கவுன்சிலர் ஆனிமுத்து, யூனி யன் தலைவர் முனியம்மாள் ராஜேந்திரன், கூட்டுறவு ஒன் றிய துணை தலைவர் மதிவா ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை ஆட்சியர் ராஜேசுவரன் வரவேற்று பேசினார்.

விழாவில் அமைச்சர் சுந்தர் ராஜன் கலந்து கொண்டு திரு வாடானை யூனியனுக்கு உட் பட்ட டி.நாகணி ஊராட்சி யில் 1,088 பேருக்கும், கலிய நகரி ஊராட்சியில் 768 பேருக்கும், வெள்ளையபுரம் ஊராட்சியில் 778 பேருக்கும் என 2,634 பயனாளிகளுக்கு விலையில்லா பொருட்களை வழங்கினார். விழாவில் அவர் பேசியதாவது:- தமிழக அர சின் சார்பில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் திரு வா

டானை சட்டமன்ற தொகு தியில் 51,362 பேருக்கு விலை யில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறிகள் வழங்கப்பட் டுள்ளது.

## குடிநீர் பிரச்சினை

ராமநாதபுரம் மாவட்டத் தில் குடிநீர் பிரச்சி னையை தீர்க்க மாவட்ட நிர்வாகத் துக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஆலோசனை வழங்கியுள்ளார். ராமநாதபு ரம் மாவட்டத்தில் உள்ள கண்மாய், ஊரணிகளை இந்த ஆண்டு ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. தமிழகத்தில் உள்ள 1.86 கோடி குடும்ப அட்டைதா ரர்களுக்கு ரூ.4,900 கோடி மானியமாக வழங்கி 20 கிலோ அரிசியை விலையில்லாமல் வழங்கி வருகிறார். இந்தியாவி லேயே உணவு பாதுகாப்பு திட்டத்தை தமிழக முதல்வர் தான் முதன் முதலாக செயல் படுத்தி உள்ளார்.

மத்திய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையிலும் தமிழ்நாட்டு மக்களின் தேவை யறிந்து திட்டங்களை அறி வித்து செயல்படுத்தி வருகி றார். இந்த ஆண்டு ரூ.150 கோடியில் ராமேசுவரத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக் கப்பட உள்ளது. இதேபோல கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரம் உயர கறவை மாடுகள், விலையில்லா வெள் ளாடுகள் வழங்கப்பட்டு வரு கிறது. திருவாடானை-ஓரி யூர் சாலை அகலப்படுத்தும் பணி ரூ.24 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகி றது.

## பயிர் காப்பீடு

கடந்த ஆண்டு ராமநாத புரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணமாக ரூ.133 கோடியை வழங்கிய தமிழக அரசு பயிர் காப்பீட்டு தொகை யாக ரூ.116 கோடியை வழங்கி யுள்ளது. திருவாடானை தாலுகாவில் பயிர் காப்பீடு தொகை வழங்குவதில் புல் லூர் தாலுகா விடுபட்டுள்ளது. இதுதொடர்பாக விவசாயிக ளின் கோரிக்கையை வரு வாய்த்துறை அமைச்சர் மற் றும் வருவாய்த்துறை செயலர் மூலமாக தமிழக அரசின் கவ னத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. எனவே விரை வில் புல்லூர் பிர்கா விவசா யிகளுக்கு பயிர் காப்பீடு தொகை வழங்கப்படும்.

இலங்கை தமிழர்களின் நல னில் அக்கறை காட்டாத மத் திய அரசு ராமேசுவரம் மீன வர்கள் கடலில் மீன் பிடிக்க சென்றால் இலங்கை கடற்ப டையால் துப்பாக்கி சூட் டுக்கு ஆளாக்கப்படுகின் றனர். ஆனால் பலமுறை முதல்- அமைச்சர் ஜெயலலிதா மத் திய அரசை வலியுறுத்தியும் அதனை தடுக்க எவ்வித நட வடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அரசு மக்களுக்கு வழங்கி வரும் சிறப்பு திட்டங் களை இந்தியா முழுவதும் செயல்படுத்த தமிழக மக்கள் என்றென்றும் முதல்- அமைச் சர் ஜெயலலிதாவுக்கு ஆதர வாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். விழாவில் தாசில்தார் காமாட்சி, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஜெயஜோதி, மாவட்ட கவுன்சிலர் ஆனந்த வள்ளி, கூட்டுறவு அச்சக துணை தலைவர் கந்தவேலன், ஊராட்சி தலைவர்கள் பாகம்பிரியாள், மாதவன், ஜரினாபேகம், ஒன்றிய கவுன் சிலர்கள் அஷ்ரப் நிஷா, மோகன், ஒன்றிய ஜெயலலிதா பேரவை செயலாளர் செங் கைராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர். துணை தாசில்தார் சந்திரன் நன்றி கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ரூ.1450 கோடியில் தமிழகத்தில் நியூட்ரினோ ஆய்வு மையம்: பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு



இந்திய அறிவியல் மாநாட்டில் பேசுகிறார் பிரதமர் மன்மோகன் சிங்.

தமிழகத்தில் ரூ.1,450 கோடியில் அணு துகள் (நியூட்ரினோ) ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுகிறது என்று பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்தார்.

மேலும் ரூ.4,500 கோடியில் தேசிய உயர் செயல்திறன் கணினிசார் அறிவியல் திட்டமும் ரூ.3,000 கோடியில் தேசிய புவியியல் தகவல் முறை திட்டமும் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலம், ஜம்முவில் 101-வது தேசிய அறிவியல் மாநாடு திங்கள்கிழமை தொடங்கியது. ஐந்து நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் இருந்து 500-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பங்கேற்றுள்ளனர். இதில் பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது:

மக்களின் உடல்நலம், வேளாண்மை உற்பத்தியில் தன்னிறைவு, சுற்றுச்சூழலைப் பாதிக்காத எரிசக்தி, தண்ணீர் பற்றாக்குறை சவாலை சமாளிப்பது உள்ளிட்ட துறைகளில் நவீன ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 2 சதவீதம் அளவுக்கு அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்போதுதான் அறிவியலின் மூலம் சமூகத்துக்கு சேவையாற்ற முடியும்.

மத்திய அரசு சார்பில் ரூ.4,500 கோடியில் உயர் செயல்திறன் கணினிசார் அறிவியல் தேசிய திட்டமும் ரூ.3,000 கோடியில் தேசிய புவியியல் தகவல் முறை திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் தமிழகத்தில் ரூ.1450 கோடியில் அணு துகள் (நியூட்ரினோ) ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

அணுஆராய்ச்சியில் இந்தியா குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியுள்ளது. சென்னை அருகேயுள்ள கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புரோட்டோடைப் அணுஉலை பணிகள் இந்த ஆண்டு இறுதியில் நிறைவடையும்

சந்திரன், செவ்வாய்க் கிரகத்துக்கு நாம் வெற்றிகரமாக விண்கலங்களை அனுப்பியுள்ளோம். இன்னும் பல்வேறு சாதனைகளைப் படைப்போம் என்றார் பிரதமர் மன்மோகன் சிங்.

**போடி மலையில்..**

நியூட்ரினோ என்பது அணுவைவிட மிகச் சிறிய துகள். கண்ணுக்குப் புலப்படாத இந்தத் துகளை ஆராய்வதன் மூலம் பிரபஞ்சம் உருவான ரகசியத்தை அறிந்து கொள்ள முடியும் என்று நம்பப்படுகிறது.

இந்த ஆராய்ச்சிக்காக நீலகிரி மலையில் சுரங்கம் தோண்டி “இந்திய நியூட்ரினோ ஆராய்ச்சி மையத்தை” (ஐ.என்.ஓ.) அமைக்க முதலில் திட்டமிடப்பட்டது.

ஆனால் இத்திட்டத்தால் நீலகிரியின் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் எழுந்ததால் இப்போது தேனி மாவட்டம் போடி மலைப் பகுதியில் பொட்டிபுரம் கிராமத்தில் நியூட்ரினோ மையத்தை அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

## திருச்செந்தூர்: ரூ. 8.47 கோடியில் தூண்டில் வளைவு: புன்னக்காயலில் பணிகள் தொடக்கம்

புன்னக்காயல் மீனவர் கிராமத்தில் ரூ. 8.47 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கப்படுகிறது.

இதற்கான பணிகள் தொடக்க விழா, மாவட்ட ஆட்சியர் ம.ரவிக்குமார் தலைமையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், புன்னக்காயல் என்றாலே அனைவரும் மீன்பிடி தொழில் செய்பவர்களாகவே உள்ளனர். நெடுங்காலமாக மீன்பிடித் தொழிலுக்கு இடையூறாக தாமிரவருணி முகத்துவாரத்தில் அவ்வப்போது மணல் திட்டுக்கள் உருவாகி வருகின்றன.

40 ஆண்டு காலமாக மீனவர்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் இப்பிரச்சினை, தமிழக முதல்வர் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மீனவர்களுக்கு உதவும் வகையில், ரூ. 8.47 கோடி செலவில் தூண்டில் வளைவு அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு, பொதுப்பணித்துறை மூலம் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மீனவர்கள் எளிதாக கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லலாம். மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்க, இந்த அரசு எப்போதும் உறுதுணையாக இருக்கும். என்றார்.

**தொல்லை தந்த மணல் திட்டுகள்**

தாமிரவருணி ஆறு, மன்னார் வளைகுடாவில் சங்கமிக்கும் முகத்துவாரத்தில், ஆற்றின் வேகத்தால், கடலுக்குள் மணல் திட்டுக்கள் உருவாகி வருகின்றன. இதனால், மீன்பிடி படகுகள் கடலுக்குள் செல்லும் போது, திட்டுக்களில் சிக்கி, விபத்துக்கு உள்ளாகி விடும். அரசை எதிர்பாராமல், இம்மணல் திட்டுக்களை ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை மீனவர்களே, தங்கள் செலவில் அப்புறப்படுத்தி வந்தனர்.

பல ஆண்டுகளாக நீடித்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், தூண்டில் வளைவு அமைக்கப்படுகிறது.

தாமிரவருணி ஆற்றின் முகத்துவாரத்தில் அமையவுள்ள இந்த தூண்டில் வளைவு, வடக்கு பக்கம் 300 மீட்டர் நீளத்திலும், தெற்கு பக்கம் 400 மீட்டர் நீளத்திலும் அமைய உள்ளது. இடையில் 100 மீட்டர் அகல நீர்ப்பாதை அமைய உள்ளது. இனி வரும் காலங்களில் நீர்ப்பாதையில் மணல் திட்டு உருவாவது தடைபடும்.